மக்கள் மன்றம் மூலம் பொதுமக்களின் பிரச்சினைகள் உடனடியாக தீர்க்கப்பட்டு வருகின்றன. மேலும் சாலை விபத்தில் காயம் அடைந்தவர்களை உடனடியாக அரசு அல்லது தனியார் மருத்துவமனைகளில் சேர்த்தால் சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் பணமில்லா சிகிச்சை இட்டத்தின் வாயிலாக இலவசமாக காப்பீட்டு தொகையாக ரூ.1.5 லட்சம் வரை வழங்கப்படுகிறது. ஆதலால் இத்திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆயுதங்கள் நிரந்தர

சைபர் குற்றங்கள் புதுச்சேரி மாநிலம் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் நடைபெற்று வருகிறது. குறிப்பாக வேலைவாங்கித் தருவதாகவும் பங்குச்சந்தை முதலீடு போன்ற பல்வேறு முறைகளில் மக்களை ஏமாற்றுகின்றனர். இதில் பொதுமக்கள் மாநிலம் இதில் விட வேண்டாம்.

கடந்த சில தாட்களுக்கு முன் ஜிப்மர் மருத்துவமனையில் வேலைவாங்கித் தருவதாக கூறி பலரிடம் பணம் மோசடி செய்யப் பட்டது. இதுதொடர்புடைய 3 பேரை கைது செய்துள்ளோம். மேலும் இந்த மோசடியின் தொடர்புள்ள மேலும் சிலரை போலீசார் தேடி வருகின்றனர்.

கூலிப்படைகளுக்கு எதிராக நடவடிக்கை

புதுச்சேரி போலீசார் சார்பில் ரவுடிகள் மற்று

டி.ஆர்.பட்டினம் காவல் நிலையத்துக்கு விருது

சீனியர் எஸ்பி உட்பட 29 போலீசாருக்கு பதக்கம்

புதுச்சேரி, ஆக. 16: புதுச்சேரி கடற்கரை சாலையில் நடந்த சுதந்திர தினவிழாவில் சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கும், சிறந்த காவல் நிலையத்துக்கும் முதல்வர் ரங்கசாமி பதக்கம் மற்றும் விருது வழங்கி கவுரவித்தார். இதில் சீனியர் எஸ்பி அனிதா ராய், ஐய்வு பெற்ற எஸ்பி வீரவல்லபன், டிஜிபி அலுவலக இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன் ஆகியோருக்கு குடியரசு தலைவரின் காவல் பதக்கமும், மங்களம் காவல் நிலைய எஸ்-இன்ஸ்பெக்டர் பெரியசாமி, காவல் தலைமையக சப்-இன்ஸ்பெக்டர் சிந்து, ஏஎஸ்ஐ சந்திரமொழி, மாகே காவல் நிலைய ஏஎஸ்ஐ மனோஜ்குமார் ஆகியோருக்கு முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது.

போக்குவரத்து காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் செருநூக்கா ராஜூ, மாகே கட்டோர காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் சுனில் குமார் மூனாங்கடியில், லாஸ்பேட்டை சப்-இன்ஸ்பெக்டர் புஷ்பலிங்கம், கோட்டுச்சேரி காவல் நிலைய ஏஎஸ்ஐ ஆரோக்கியசாமி, காவலர் பயிற்சி பள்ளி ஏஎஸ்ஐ ரஜினி, டிஜிபி அலுவலக தலைமை காவலர் விஸ்வகேது, ஐஜி அலுவலக தலைமை காவலர் மனோஜி, காட்டேரிக்குப்பம் காவல் நிலைய தலைமை காவலர் ஜெகதீசன், வில்லியனூர் காவல் நிலைய தலைமை காவலர் சபரி, காவலர் பயிற்சி பள்ளி தலைமை காவலர் ராமராஜா, தன்வந்தரி நகர் காவல் நிலைய தலைமை காவலர் வல்லத்தான், பிஎபி பிரிவு தலைமை காவலர் முருகன், குற்றப்பதிவு பிரிவு தலைமை காவலர் தாமோதிரன், காவல் தலைமை இட தலைமை காவலர் பிர காஷ், சிறப்பு பிரிவு தலைமை காவலர் ஹாஜா குதுப்தின், ஆயுதப்படை பிரிவு மோகன், ஐஆர்பிஎன் ஏஎஸ்ஐகள் ரமேஷ், பார்த்திபன், வினோத ஆகிய 20 பேருக்கு ராஜீவ் காந்தி காவல் பதக்கம் வழங்கப் பட்டது.

சிறந்த ஊர்க்காவ பணிக்கான மத்திய உள்துறை அமைச்சரி காவல் பதக்கம் மற்று பாராட்டு சான்றிதழ் ஊர்க்காவல் படை க கள் கோபு, சரத்பாபு ஆகியோருக்கு வழங் கப்பட்டது. மேலும், தலைமை செயலரின் சிறந்த காவல் நிலை துக்கான விருது கா கால் டி.ஆர்.பட்டின காவல் நிலையத்துக் வழங்கப்பட்டது. இ விருதை டி.ஆர்.பட்டி னம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் முரு பெற்றுக் கொண்டா

புதுவையில் காரகுல மவறற் தினம

போர்வீரர் நினைவு சின்னத்தில் முதல்வர், அமைச்சர்கள் அஞ்சலி



► காரில் வெற்றி தினத்தை முன்னிட்டு புதுச்சேரி போர் வீரர்கள் நினைவு சின்னத்தில் முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமிநாராயணன், திருமுருகன், துணை சபாநாயகர் ராஜவேலு, அரசு கொறடா ஏகேடி.ஆறுமுகம், எம்எல்ஏக்கள் பாஸ்கர் (எ) தட்சிணாமூர்த்தி, கேஎஸ்பி.ரமேஷ், லட்சுமிகாந்தன் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

புதுச்சேரி, ஜூலை 27: புதுச்சேரி அரசு சார்பில் கார்கில் வெற்றி தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி கடற்கரை சாலையில் பிரெஞ்சு தூதரகம் எதிரேவுள்ள போர் வீரர்கள் நினைவு சின்னத்தில் முதல்வர் ரங்கசாமி மலர் வளையம் வைத்து, கார்கில் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து, சபாநாயகர் செல்வம், உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பொதுப் பணித்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன், குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமுருகன், துணை சபாநாயகர் ராஜவேலு, அரசு கொறடா ஏகேடி.ஆறுமுகம், எம்எல்ஏக்கள் பாஸ்கர் (எ) தட்சிணாமூர்த்தி, கேஎஸ்பி.ரமேஷ், லட்சுமிகாந்தன், தலைமை செயலர் சரத் சவுகான், சட்டம் ஒழுங்கு டிஜிபி சத்தியசுந்தரம், அதிகாரிகள் மற்றும் முன்னாள் ராணுவ வீரர்கள் பலரும் போர்வீரர் நினைவுச் சின்னத்திற்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். தியாகிகளின் நினைவாக 2 நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேபோல், புதுச்சேரி முப்படை தாண்னுவ வீரர்கள் மற்றும் வீரதீரச் செயல் புரிந்த ஆண்டு சார்பில் 26ம் ஆண்டு கார்கில் வெற்றி தினவிழா சங்க தலைவர் மோகன் குமார் தலைமையில் நடந்தது. இதில் முன்னாள் ராணுவ வீரர்கள் பலரும் கலந்து கொண்டு நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.



► கார்கில் நினைவு சின்னத்துக்கு வீர வணக்கம் செலுத்திய முதல்வர் ரங்கசாமி.

இந்திய கடற்படை கண்ணில் மண்ணை தூவி இலங்கைக்கு கஞ்சா கடத்தல்

இலங்கையை சேர்ந்த 2 பேர் உள்பட 5 பேர் கைது படகு, 5 சொகுசு கார், 2 லாரிகள் பறிமுதல்



► இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்ற 5 பேரை போலீசார் கைது செய்தனர். அந்தப் படம் பறிமுதல் செய்யப்பட்ட படகை புதுச்சேரி சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டும், சீனியர் எஸ்பி. லட்சுமி சவுஜன்யா ஆகியோர் பார்வையிட்டனர்.

காரைக்கால், ஜூலை 25: காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி பட்டினத்தில் கடந்த மே மாதம் தேதி ஒரு வீட்டில் இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 304 கிலோ கஞ்சாவை போலீசார் கைப்பற்றினர். மேலும் இதுதொடர்பாக 2 பேரை கைது செய்து, ரூ.1.5 கோடி மதிப்பிலான 304 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இதைத்தொடர்ந்து, புதுச்சேரி மாவட்டம் மண்ணாடிபட்டு பகுதியில் இருந்து கஞ்சா கடத்தப்படுவதாக காரைக்கால் மாவட்ட போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, காரைக்கால் மாவட்ட எஸ்பி பிரியங்கா நங்கரு தலைமையிலான போலீசார் மற்றும் தனிப்படை போலீசார் கடந்த 23ம் தேதி இரவு முதல் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது, புதுச்சேரி மாநிலம் பாகூர் அருகே மாநில எல்லைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றுகொண்டிருந்த 5 பேரை போலீசார் பிடித்து விசாரித்தனர். அதில், அவர்கள் இலங்கை மன்னார் மாவட்டத்தை சேர்ந்த நிஸ்மி மற்றும் முகமது ஜெஸ்மின் என்பதும், இவர்கள் இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்றதும் தெரியவந்தது. இதையடுத்து, அவர்களிடமிருந்து 2 சொகுசு கார்கள், 2 லாரிகள் மற்றும் 5 செல்போன்களை பறிமுதல் செய்தனர்.



► கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் லாரி.

இதுகுறித்து நிஸ்மி மற்றும் முகமது ஜெஸ்மின் ஆகியோர் அளித்த தகவலின்பேரில் இலங்கை தமிழக பகுதி வழியாக காரைக்கால், நாகை கள்ளிட்ட கடலோர பகுதிகளில் இறக்கி இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து, அவர்களிடமிருந்து 2 சொகுசு கார்கள், 2 லாரிகள் மற்றும் 5 செல்போன்களை பறிமுதல் செய்தனர்.

இதைத்தொடர்ந்து நிஸ்மி மற்றும் முகமது ஜெஸ்மின் ஆகியோர் அளித்த தகவலின்பேரில் இலங்கை தமிழக பகுதி வழியாக காரைக்கால், நாகை கள்ளிட்ட கடலோர பகுதிகளில் இறக்கி இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து, அவர்களிடமிருந்து 2 சொகுசு கார்கள், 2 லாரிகள் மற்றும் 5 செல்போன்களை பறிமுதல் செய்தனர்.

கடலில் வீசப்பட்ட கஞ்சா பொட்டலங்கள்

இலங்கையை சேர்ந்த 2 பேரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இலங்கையில் உள்ள தனது உறவினர் சேவ்குமார் (40), திருகோணமலையை சேர்ந்த முகமது (39) ஆகியோர் கடந்த 2 ஆண்டுகளாக தமிழக மற்றும் காரைக்கால் பகுதியில் இருந்து பல முறை கஞ்சா கடத்தி வந்ததும், இதில் கடலோர காவல் படை, கடலோர காவல் போலீசார் தங்களை துரத்தி வருவதை அறிந்ததும் கஞ்சா பொட்டலங்களை கடலில் வீசியதும் தெரிய வந்தது. இதுகுறித்து காரைக்கால் மாவட்ட போலீசார் வழக்குப்பதிவு செய்து, தப்பியோடிய 3 பேரை தேடி வருகின்றனர்.

முக்கிய குற்றவாளிகளை பிடிக்க நடவடிக்கை

புதுச்சேரி ஜிஎச் சந்திரசேகரன் கூறுகையில், மீனவர்களை மேற்கொண்டு பரிமுதல் செய்து பொருட்களை ஆய்வு மேற்கொண்டதில், பின்னர் நெருக்கமான வகையில், காரைக்கால் போலீசார் துணிச்சலாக செயல்பட்டு இந்த கடத்தலை தடுத்துள்ளனர். மேலும் இந்த கடத்தல் முக்கியமான இலங்கையை சேர்ந்த சென் உட்பட 3 பேர் கஞ்சா கடத்தல் ஈடுபட்டதாக வெளிவந்துள்ளனர். அவர்களை கைது செய்யும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



Chief Minister N. Rangasamy presented awards to police officials in recognition of their service during Independence Day celebrations in Puducherry on Friday. S.S.KUMAR

CM presents awards to police officials, government staff for meritorious service

THE HINDU BUREAU
PUDUCHERRY

Police officers, government employees and NCC cadets were presented awards and medals on the occasion of Independence Day celebrations held on Beach Road on Friday.

After his Independence Day address, Chief Minister N. Rangasamy presented President's police medal for meritorious service to IPS officer Anita Roy, currently serving as Senior Superintendent of Police (Headquarters) in Puducherry. K. L Viravallabane, who recently retired as Superintendent of Police and B. Viswanathan, Inspector of Police, currently serving in DGP's office, also received the President's medal for meritorious service.

Mr. Rangasamy presented Chief Minister's medal for best service to Sub Inspector P. Periyasamy and Special Grade Sub Inspec-

service was given to Special Grade Assistant Sub Inspector P. Chandramoth and Special Grade Assistant Sub Inspector V. K Manoj Kumar.

Sub Inspector of Police T. R Pattinam Police Station, M. Murugan received the Chief Secretary's trophy for the best Police Station for the year 2024.

Mr. Rangasamy also presented award for excellence in Public Administration under the category government department institutions to J. Ramesh Chief of Government Pharmacy and K. Ayyappa Medical Superintendent Rajiv Gandhi Governme Women and Children Hospital.

Director of Departme of Women and Child Development P. Muthumee was presented the awa under the category of C Minister's appreciation initiative in Pul Administration.

Three officers receive President's Police Me

EXPRESS NEWS SERVICE
Puducherry

IN a moment of pride for the Union Territory, three officers from the Puducherry police were conferred with the President's Police Medals in recognition of their distinguished and meritorious service, on the occasion of the 78th Independence Day.



IGP Ajit Kumar Singla | SP Saravanan | Inspector R Karthikeyan

Dr Ajit Kumar Singla, IPS (AGMUT cadre), Inspector General of Police, Puducherry, received the medal for Distinguished Service. His career has spanned several critical roles across the country, marked by operational excellence and public service.

Dr Singla began his service as Deputy Commissioner of Police (Election Cell), Delhi, where he ensured smooth and incident-free Assembly and Parliamentary elections, earning commendations from the Lieutenant Governor and State Election Commissioner. He later served as Superintendent of Police in Tirap, Arunachal Pradesh, where his intelligence core NSCN insurgents. For this, he was awarded the State Gold Medal by the Governor of Arunachal Pradesh on Independence Day in 2014.

Currently serving as the head of Puducherry Police, Dr Singla has implemented citizen-centric initiatives like Makkal Mandram (public grievance meetings), Pugar Petty (complaint boxes), Mission Veera Mangai (women's self-defence), and Mission Zero Fatality, besides securing ISO certification for several police stations.

Additionally, Superintendent of Police G Saravanan, posted in Mahe, and Inspector R Karthikeyan, serving at Orleanpet Police Station, were awarded the Police Medal for Meritorious Service.

Karthikeyan has served the force for 23 years, beginning as a constable in 2002. He solved several high-profile cases, including the 2016 murder of a police constable, where he successfully identified a burnt body using scientific techniques.

He also played a significant role in implementing the CCTNS (Crime and Criminal Tracking Network and Systems) project in Puducherry and achieved a major breakthrough in an NDPS case with the seizure of 75 kg of cannabis.

போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த

மதகடிப்பட்டு நான்கு முனை சந்திப்பில் எம்எல்ஏ, டிஐஜி ஆய்வு



▶ மதகடிப்பட்டு நான்கு முனை சந்திப்பில் அங்காளன் எம்எல்ஏ, டிஐஜி சத்தியசுந்தரம், சீனியர் எஸ்பி நித்யா ஆகியோர் ஆய்வு செய்தனர்.

திருபுவனை, ஆக. 10: புதுச்சேரி- விழுப்புரம் நான்கு வழி சாலையில் மதகடிப்பட்டு நான்கு முனை சந்திப்பு உள்ளது. இப்பகுதியை சுற்றி வங்கிகள், அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள், மதுபான கடைகள் அமைந்துள்ளன. தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், இளைஞர்கள், மாணவ, மாணவிகள் வந்து செல்கின்றனர். இதனால் எந்நேரமும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியாககாணப்படுகிறது. போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த போக்குவரத்து போலீசார் இருந்தபோதிலும் காலை, மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இது குறித்து பொதுமக்கள் உயர் அதிகாரிகளிடம் புகார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், தொகுதி எம்எல்ஏ அங்காளன், டிஐஜி சத்தியசுந்தரம், சீனியர் எஸ்.பி. நித்யா, போக்குவரத்து எஸ்.பி மோகன்குமார், இன்ஸ்பெக்டர் சண்முகம் ஆகியோர் மதகடிப்பட்டு நான்கு முனை சந்திப்பில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டனர். மேலும், அப்பகுதியில் போலீஸ் பூத் அமைக்க வேண்டிய இடம் பற்றியும் ஆலோசனை செய்தனர்.



விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட

காவல் நிலையங்களில் போலீஸ் தூப்பிரண்டு ஆய்வு

திருநள்ளாறு, ஜூலை.18- புதுவையில் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று மாநிலத்தில் சிறந்த காவல் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான விருதுக்கு காரைக்கால் மாவட்டத்தில் இருந்து திருநள்ளாறு, திருப்பட்டினம் காவல் நிலையங்களை காரைக்கால் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா காவல்துறை தலைமைக்கு பரிந்துரை செய்துள்ளார்.

அதன்பேரில் புதுச்சேரி போலீஸ் சூப்பிரண்டு ரங்கநாதன் தலைமையிலான தேர்வு குழுவினர் திருநள்ளாறு, திருப்பட்டினம் காவல் நிலையங்களை ஆய்வு செய்தனர். போலீஸ் அதிகாரிகள், போலீசார் சீருடை அணிதல் முறை, அணிவகுப்பு, சட்டநுணுக்கங்களை அறிந்துள்ளனரா? புகார் அளிக்க வருவோரை அணுகும் முறை, மனித உரிமை மீறல் புகார்கள் உள்ளதா? போலீஸ் நிலைய வளாகம் சுகாதாரமாக பராமரிக்கப்படுகிறதா? உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின்போது திருநள்ளாறு இன்ஸ்பெக்டர் செந்தில் குமார், திருப்பட்டினம் இன்ஸ்பெக்டர் மரிய கிறிஸ்டின் பால் மற்றும் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் உடனிருந்தனர்.

பந்த் போராட்டம் எதிரொலி: எல்லையில் பலத்த பாதுகாப்பு

காலாப்பட்டு, ஜூலை 10: ஒன்றிய அரசு அமல்படுத்தியிருக்கும் புதிய தொழிலாளர் சட்டங்களை திரும்பப் பெறுதல், தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியமாக ரூ.26 ஆயிரம் நிர்ணயம் செய்தல், ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சம வேலை, சம ஊதியம் வழங்குவதல், பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்துதல், மூடப்பட்ட பஞ்சாலைகள் மற்றும்



தொழிற்சங்கங்கள் சார்பில் பந்த் போராட்டம் நடந்தது.

இப்போராட்டத்திற்கு இந்தியா கூட்டணி கட்சிகள் ஆதரவு தெரிவித்திருந்தன. இந்த பந்த் போராட்டத்தையொட்டி புதுச்சேரி-தமிழக எல்லையான கனகசெட்டிகுளம் பகுதியில் புதுச்சேரி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். காலாப்பட்டு பகுதியில்

சுற்றுலா பயணிகளிடம் அத்துமீறலை தடுக்க

கடற்கரையில் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு

புதுச்சேரி, ஜூலை.14- புதுவை கடற்கரையில் சுற்றுலா பயணிகளிடம் அத்துமீறலை தடுக்கதுப் பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சுற்றுலா பயணிகளிடம் அத்துமீறல்

புதுச்சேரிக்கு வார இறுதி நாட்களில் வெளிமாநிலத்தில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவது வழக்கம். அவர்கள் கடற்கரை, பாண்டி மெரினா பீச், பாரதி பூங்கா, மணக்குள விநாயகர் கோவில், அரவிந்தர் ஆசிரமம், அருங்காட்சியகம், சண்டே மார்க்கெட் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு சென்று பார்வையிடுவார்கள்.

இந்த நிலையில் புதுவைக்கு வரும் வெளிமாநில சுற்றுலா பயணிகளை சிலர் கேலி போன்ற அத்துமீறல்களில் ஈடுபடுவதாக தொடர்ந்து



புதுவை கடற்கரை சாலையில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புக்காக காவல் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

புகார்கள் வந்தது. மேலும் சமூக வலைதளத்திலும் ஏராளமானோர் இதுபற்றி விமர்சனம் செய்தனர்.

துப்பாக்கி ஏந்தி பாதுகாப்பு

இதன் எதிரொலியாக புதுவை போலீஸ் டி.ஜி.பி. ஷாலினி சிங் சுற்றுலா தலங்களில் பாதுகாப்பை பலத்தப்படுத்த போலீசாருக்கு அதிரடியாக உத்தரவிட்டார். அதன்படி கடற்கரை சாலை காந்தி சிலை எதிரே காவல் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்புக்காக துப்பாக்கி ஏந்திய பெண்

பொதுமக்கள தவறவிட்ட 30 செல்போன் மீட்டு ஒப்படைப்பு

சமூக வலைதளம் மூலம் வேலை வழங்குவதாக கூறினால் பணம் செலுத்தி ஏமாற வேண்டாம்

சீனியர் எஸ்பி அறிவுரை

புதுச்சேரி, ஆக. 18: புதுச்சேரி இணைய வழி காவல் நிலையத்தில் நடந்த மக்கள் மன்றத்தில் சீனியர் எஸ்பி நித்யா ராதாகிருஷ்ணன், எஸ்பி பாஸ்கரன் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் தியாகராஜன், கீர்த்தி ஆகியோர் பங்கேற்றனர். இதில் 30க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு, குறைகளை தெரிவித்தனர். அதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்க இன்ஸ்பெக்டருக்கு சீனியர் எஸ்பி உத்தரவிட்டார். மேலும், பொதுமக்கள் தவறவிட்ட 30 செல்போன்களை கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும் இணைய வழி குற்றங்களான ஆப் மூலம் உடனடி கடன் மற்றும் குறைந்த வட்டியில் கடன் தருவதாக்கூறி, உங்கள் புகைப்படங்களை ஆபாசமாக சித்தரித்து மிரட்டினால், அதனை நம்பி பணம் செலுத்தி ஏமாற வேண்டாம். சமூக வலைதளங்கள் மூலமாக உங்களுக்கு குறைந்த முதலீட்டில் பங்குசந்தை டிரேடிங்



பொதுமக்கள் தவறவிட்ட செல்போன்களை கண்டுபிடித்து உரியவர்களிடம் சைபர் கிரைம் சீனியர் எஸ்பி நித்யா ராதாகிருஷ்ணன் ஒப்படைத்தார்.

ஆசைவார்த்தை கூறினால் தாக்கூறி வங்கி கணக்குகள் மற்றும் சிம் கார்டு கேட்டால் அதனை நம்பு பணம் முதலீடு செய்யாதீர்கள். பிடெக்ஸ் கொரியர், ட்ராய், மும்பை போலீஸில் இருந்து பேசுவதாக்கூறி, உங்களை டிஜிட்டல் அரெஸ்ட் செய்துள்ளோம் என்று கூறினால், அவர்களது தொடர்பை உடனடியாக துண்டித்து விடுங்கள். வீட்டில் இருந்தே சமூக வலைதளங்கள் மூலமாக அதிக பணம் சம்பாதிக்கலாம் என்று பகுதிநேர வேலைவாய்ப்புகள் வழங்குகிறோம் என்று ஆசைவார்த்தை கூறினால், அதனை நம்பி யாரும் பணம் செலுத்தி ஏமாற வேண்டாம்.சமூக வலைதளங்களில் அல்லது தெரிந்தவர்கள் யாரேனும்



புதுச்சேரி காவல் துறை சார்பில் பிட் இந்தியா விழிப்புணர்வு சைக்கிள் பேரணியை முதல்வர் ரங்கசாமி, தலைமை செயலர் சரத் சவுகான், டிஜிபி ஷாலினி சிங் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். பேரணியில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், ஐஜி அஜித்குமார் சிங்லா, டிஐஜி சத்தியசுந்தரம், சீனியர் எஸ்பிக்கள் கலைவாணன், நித்யா ராதாகிருஷ்ணன், ஏ.கே.லால், கிழக்கு எஸ்பி இஷா சிங் மற்றும் போலீசார், மாணவர்கள் பங்கேற்றனர்.

புதுச்சேரி காவல்துறை சார்பில்

அமைச்சர், போலீசார், மாணவர்கள் பங்கேற்ற 'பிட் இந்தியா' விழிப்புணர்வு சைக்கிள் பேரணி

முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, ஆக. 25: 'பிட் இந்தியா' என்பது மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் உடல் செயல்பாடுகள், விளையாட்டுகளை சேர்ப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்க ஊக்கு விப்பதற்காக நடத்தப்படும் ஒரு நாடு தழுவிய இயக்கமாகும். உடல் ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சி அவசியம் என்பதை வலியுறுத்துகிறது. இந்நிலையில் புதுச்சேரி காவல்துறை சார்பில் பிட் இந்தியா விழிப்புணர்வு சைக்கிள் பேரணி கடற்கரை காந்தி சிலை அருகே நேற்று மாலை நடந்தது. முதல்வர் ரங்கசாமி, தலைமை செயலர் சரத்சவுகான், டிஜிபி ஷாலினி சிங் ஆகியோர் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தனர்.

சைக்கிள் பேரணியில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், ஐஜி அஜித்குமார் சிங்லா, டிஐஜி சத்தியசுந்தரம், சீனியர் எஸ்பிக்கள் கலைவாணன், நித்யா ராதாகிருஷ்ணன், ஏ.கே.லால், கிழக்கு எஸ்பி இஷா சிங் மற்றும் எஸ்பிக்கள், இன்ஸ்பெக்டர்கள், எஸ்ஐக்கள், காவலர்கள், மாணவர்கள், தன்னார்வலர்கள் 250க்கும் மேற்பட்டோர் பங்கேற்று சைக்கிள் ஓட்டிச் சென்றனர். ஒயிட்டவுனில் பல்வேறு சாலைகள் வழியாக சுமார் 4 கி.மீ தூரம் சென்று மீண்டும் கடற்கரை சாலை காந்தி சிலை அருகே நிறைவடைந்தது.



விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உதவிட

போக்குவரத்து போலீசாருக்கு முதலுதவி சிகிச்சை பயிற்சி

புதுச்சேரி, ஆக.2

ஆபத்து காலத்தில் பொதுமக்களுக்கு எவ்வாறு முதலுதவி அளிப்பது குறித்து புதுவை போக்குவரத்து போலீசாருக்கு பயிற்சி முகாம் கோரிமேட்டில் உள்ள காவலர் பயிற்சி பள்ளியில் நேற்று நடந்தது. போலீஸ் டி.ஐ.ஜி. சத்தியசுந்தரம் தலைமை தாங்கி, பயிற்சியை தொடங்கி வைத்தார்.

சீனியர் போலீஸ் சூப்பிரண்டு நித்யா ராதாகிருஷ்ணன், போலீஸ் சூப்பிரண்டுகள் மோகன்குமார், செல்வம் மற்றும் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், போக்குவரத்து போலீசார் கலந்துகொண்டனர்.

முகாமில், விபத்தில் சிக்கி உயிருக்கு போராடுபவர்களுக்கு எவ்வாறு முதலுதவி சிகிச்சை அளிப்பது, பாம்பு கடியால் பாதிக்கப்பட்டவர்கள், தற்கொலை முயற்சியாக விஷம் குடித்தவர்களை முதலுதவி செய்து காப்பாற்றுவது குறித்து மனித பொம்மைகளை வைத்து செய்முறை பயிற்சி வழங்கப்பட்டது. இதில் 100 போலீசார் கலந்துகொண்டனர். இந்த பயிற்சி முகாம் 28-ந்தேதி வரை நடக்கிறது.

ஆசிரியையிடம் செயின் பறித்த திருச்சி பிரபல கொள்ளையன் கைது



புதுச்சேரி மூலகுளத்தில் தனியார் பள்ளி ஆசிரியையிடம் செயின் பறித்த திருச்சியை சேர்ந்த பிரபல கொள்ளையனை ரெட்டியார்பாளையம் போலீசார் கைது செய்தனர். அவரிடமிருந்து 32 கிராம் தங்கக்கட்டி, பைக் ஆகியவற்றை கைப்பற்றினர்.

புதுச்சேரி, ஆக. 18: புதுச்சேரி மூலகுளம் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரை சேர்ந்த பிரஞ்சலின் நிர்மலாமேரி (58), உப்பளத்தில் தனியார் பள்ளி ஆசிரியை. இவர், கடந்த மாதம் 30ம் தேதி பள்ளிக்கு சென்றுவிட்டு, மாலை 4 மணியளவில் வீட்டுக்கு வந்தார். அப்போது உச்சர்ஸ் காலனி 7வது தெருக்கு தெரு அருகே 2 மர்மநபர்கள் பைக்கில் வந்து ஏஞ்சலின் நிர்மலாமேரி கழுத்தில் அணிந்திருந்த 4 பவுன் தாலி செயினை பறித்துக்கொண்டு மின்னல் வேகத்தில் தப்பிச்சென்று விட்டனர்.

இதுகுறித்து அவர், ரெட்டியார்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் முத்துக்குமார் சார் வழக்குப்பதிவு செய்தனர். தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதில் மேற்கண்ட ஆசிரியையையிடம் செயின் பறித்தது திருச்சி புத்தூரை சேர்ந்த கோபி (எ) கோவிந்த ராஜ் (30), அவரது நண்பர் சங்கர் (35) என்பதும் தெரியவந்தது. இதையடுத்து அவர்களை தீவிரமாக தேடிவந்த நிலையில் கோவிந்தராஜை நேற்று சிக்கினார். அவரை போலீசார் கைது செய்தனர். டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் முடித்த அவர், தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும், பிரபல கொள்ளையன் என்பதும், அவர் மீது தமிழ்நாட்டில் 20க்கும் மேற்பட்ட கொள்ளை, பைக்திருட்டு, இருப்பதும், 2 குண்டாஸ் போடப்பட்டு இருப்பதும் தெரியவந்தது. சம்பவத்தன்று 2 பேரும் வழிப்பறி செய்யும் நோக்கில் பைக்கில் வந்து, மேற்கண்ட ஆசிரியை நிர்மலாமேரி தனியாக நடந்து வருவதை பார்த்து, பின்தொடர்ந்து செயினை பறித்துச் சென்றதும் தெரியவந்தது. அவரிடமிருந்து திருட்டு நகைகளை உருக்கி வைத்த 32 கிராம் தங்கக்கட்டி (ரூ.4 லட்சம் மதிப்பு), ஒரு பைக் ஆகியவற்றை கைப்பற்றினர். தொடர்ந்து, தலைமனைவாக உள்ள சங்கரை தேடி வருகின்றனர்.

இவ்வழக்கில் திறம்பட செயல்பட்டு திருடனை கைது செய்த ரெட்டியார்பாளையம் போலீசாரை எஸ்பி ஸ்ருதி யரகட்டி பாராட்டினார்.

போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி

திருக்கனூர், செப். 1- திருக்கனூர் போலீஸ் நிலையம், சுப்ரமணிய பாரதி மேல்நிலைப் பள்ளி சமுதாய நலப்பணித் திட்டம் சார்பில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

நிகழ்ச்சிக்கு, டி.ஐ.ஜி., சத்தியசுந்தரம் தலைமை தாங்கி, போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். முன்னதாக, போதைப் பொருட்களினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேற்கு பகுதி எஸ்.பி., சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். இதில், இன்ஸ்பெக்டர்கள் ராஜகுமார், கீர்த்தி வர்மன், கலைச்செல்வன், சப் இன்ஸ்பெக்டர்கள் பிரியா, தமிழரசன் மற்றும் போலீசார் கலந்து கொண்டனர்.

போலீஸ் நிலையத்தில் துவங்கிய விழிப்புணர்வு பேரணி திருக்கனூர் கடைவீதி, கே.ஆர்.பாளையம், டி.வி.மலை ரோடு, வணிகர் வீதி வழியாக சென்று மீண்டும் போலீஸ் நிலையத்தில் முடிவடைந்தது.

பேரணியில் மாணவர்கள் போதைப் பொருட்கள் தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, துண்டு பிரசுரங்கள் வழங்கினர்.



திருக்கனூர் போலீஸ் நிலையம் சார்பில் நடந்த போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை டி.ஐ.ஜி., சத்தியசுந்தரம் துவக்கி வைத்தார். அருகில், எஸ்.பி., சுப்ரமணியன்.

மக்களிடம் சீனியர் எஸ்பி குறைகேட்பு

ரூ.4 லட்சம் செல்போன்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு

புதுச்சேரி, செப். 7: புதுச்சேரி இணைய வழி காவல் நிலையத்தில் நேற்று நடந்த மக்கள் மன்றத்தில் சீனியர் எஸ்பி நித்யா ராதாகிருஷ்ணன் மற்றும் இன்ஸ்பெக்டர்கள் தியாகராஜன், கீர்த்தி கலந்து கொண்டனர். இதில் 20க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு, தங்களுடைய வழக்கு சம்பந்தமாகவும், பல்வேறு குறைகளையும் தெரிவித்தனர். அந்த புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க இன்ஸ்பெக்டர்களுக்கு சீனியர் எஸ்பி உத்தரவிட்டார். மேலும், பொதுமக்கள் தவறவிட்ட 16 செல்போன்களை கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் மதிப்பு ரூ.4 லட்சம் இருக்கும்.



புதுச்சேரி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் சீனிய எஸ்பி நித்யா ராதாகிருஷ்ணன் பொதுமக்களிட குறைகளை கேட்டறிந்தார்.

போலீசார் பாதுகாப்பு ரோந்து பேரணி



புதுச்சேரி அஜந்தா சிக்னல் அருகே கிழக்கு எஸ்.பி. ஸ்ருதி தலைமையில் போலீசார் பாதுகாப்பு ரோந்து பேரணி சென்றனர்.

புதுச்சேரி, செப். 7: 3 நாட்கள் தொடர் விடுமுறையை முன்னிட்டு புதுச்சேரியில் சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். இதனால் நகரின் பல்வேறு பகுதிகளில் கடுமையாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. மேலும், வார விடுமுறை நாட்கள் என்பதால் குற்றச்சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க கிழக்கு எஸ்.பி. ஸ்ருதி தலைமையில் போலீசார் நேற்று பாதுகாப்பு ரோந்து பேரணியில் ஈடுபட்டனர்.

காமராஜர் சிலை அருகே தொடங்கிய போலீஸ் பேரணி அண்ணா சாலை, எஸ்.வி. பட்டேல் சாலை, கடற்கரை சாலை, புஸ்சி வீதிவழியாக ஒதியஞ்சாலை காவல் நிலையத்தில் முடிந்தது. பேரணியில் இன்ஸ்பெக்டர்கள் ஜெயசங்கர், கார்த்திகேயன், சப்-இன்ஸ்பெக்டர்கள், துப்பாக்கியுடன் கமாண்டோ வீரர்கள் பேரணியாக சென்றனர்.

புதுவையில் தனியார் ஐடிவல்லரி நடத்தி பல கோடி மோசடி செய்த 3 பேர் கைது



கைது செய்யப்பட்ட நபர்கள்.

சிபிசிஐடி போலீசார் அதிரடி

புதுச்சேரி, செப். 30: புதுச்சேரி காமராஜர் சாலையில் கிறிஸ்துதாஸ் என்பவர் தனியார் ஐவல்லரியை கடந்த 2020ம் ஆண்டு தொடங்கினார். இதில் கவர்ச்சிகரமான திட்டங்களில் முதலீடு செய்தால் வாரந்தோறும் 8 சதவீத வட்டி மற்றும் 25 வாரங்களில் முதலீட்டை இரட்டிப்பு செய்வதாக கூறி திட்டங்களை அறிவித்தார். இந்த வாக்குறுதிகளை நம்பி, புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் ஐடி காவல் நிலையத்தில் கடந்த 2021ம் ஆண்டு புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குபதிந்து தலைமறைவானவர்களை தேடி வந்தனர்.

புதுச்சேரி சீனியர் எஸ்.பி.(குற்றம் மற்றும் புலனாய்வு) பிரவீன் குமார் திரிபாதி சிறப்புக் குழுவை அமைக்க உத்தரவிட்டார். அதன்படி, புதுச்சேரி எஸ்.பி. (சிஐடி) பழனிவேலு மற்றும் சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் பாபுஜி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு தேடுதல் வேட்டையை தொடங்கியது.

புதிய கிரிமினல் சட்டங்கள் குறித்து

பயிற்சி முடித்த போலீஸ் அதிகாரிகளுக்கு சான்றிதழ்

டிஜிபி சத்தியசுந்தரம் வழங்கினார்



புதிய கிரிமினல் சட்டங்கள் குறித்து பயிற்சி முடித்த போலீஸ் அதிகாரிகளுக்கு டிஜிபி சத்தியசுந்தரம் சான்றிதழ் வழங்கினார். அருகில் சீனியர் எஸ்பி பிரவீன்குமார் திரிபாதி, எஸ்பி ரங்கநாதன்.

புதுச்சேரி, செப். 13: நாடு முழுவதும் புதிய கிரிமினல் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த சட்டங்களை கையாள்வது குறித்து நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநில காவல் துறை அதிகாரிகளுக்கு மாஸ்டர் ட்ரெயினிங் என்ற சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியை டெல்லியில் போலீஸ் ஆராய்ச்சி மற்றும் திட்ட நிறுவனம் அளித்து வருகிறது. அதன்படி, புதுச்சேரி காவல் துறையை சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், எஸ்பிக்கள் வரை 73 அதிகாரிகளுக்கு கோரிமேட்டில் உள்ள காவலர் பயிற்சி பள்ளியில் கடந்த 3 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியை டெல்லியில் இருந்து வந்திருந்த போலீஸ் ஆராய்ச்சி மற்றும் திட்ட நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் மதன்குப்தா அளித்தார். இந்நிலையில் பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் விழா கோரிமேட்டில் நேற்று மாலை நடந்தது. இதில் சட்டம் ஒழுங்கு டிஐஜி சத்தியசுந்தரம் கலந்து கொண்டு பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் குற்றம் மற்றும் புலனாய்வு பிரிவு சீனியர் எஸ்பி பிரவீன்குமார் திரிபாதி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை போலீஸ் பயிற்சி பள்ளி எஸ்பி ரங்கநாதன் செய்திருந்தார். புதிய கிரிமினல் சட்டங்கள் குறித்து சிறப்பு பயிற்சி பெற்ற 73 போலீஸ் அதிகாரிகள், மற்ற காவலர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள் என எஸ்பி ரங்கநாதன் தெரிவித்தார்.

பெற்றோர் கண்டித்ததால் வீட்டை விட்டு ஓட்டம் பிடித்த சிறுவன் மீட்பு

புதுச்சேரி, ஆக. 1: புதுச்சேரி ஜிப்மர் வளாகத்தில் வசித்து வரும் அதிகாரி ஒருவர், தனது 12ம் வகுப்பு படிக்கும் மகனை நேற்று காலை 6 மணியளவில் கண்டித்துள்ளார். இதில், கோபமடைந்த அச்சிறுவன் நான் எங்கேயாவது சென்று எப்படியாவது இருந்து கொள்கிறேன் என வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளார். தொடர்ந்து, சிறுவன் வீட்டுக்கு வராததால், பதறியதந்தை உடனடியாக புதுச்சேரிசைபர் கிரைம் காவல் நிலையத்துக்கு தொடர்பு கொண்டு, சம்பவத்தை கூறியுள்ளார். மேலும், சிறுவன் செல்லும்போது, செல்போனையும் உடன் எடுத்து சென்றது தெரியவந்தது.

இதையடுத்து, சைபர் கிரைம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த சப்-இன்ஸ் பெக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் காவலர் வைத்தியநாதன் ஆகியோர் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். தொடர்ந்து, உயர் அதிகாரிகள் உத்தரவின் பேரில், சிறுவன் வீட்டில் இருந்து எடுத்து சென்ற செல்போன் இருக்கும் இடத்தை கண்டு பிடித்தனர். உடனே, போலீசார் சிறுவன் இருக்கும் இடத்துக்கு சென்று, சிறுவனை மீட்டு காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தனர். தொடர்ந்து, சைபர் கிரைம் இன்ஸ்பெக்டர் தியாகராஜன், சிறுவனுக்கு சில அறிவுரைகள் சொல்லி, அறிவுறுத்தி பெற்றோருடன் அனுப்பி வைத்தனர்.

மேலும், புகார் வந்தவுடன் துரிதமாக செயல்பட்டு சிறுவனை மீட்ட சப்-இன்ஸ் பெக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் காவலர் வைத்தியநாதன் ஆகியோரை இன்ஸ்பெக்டர் தியாகராஜன் மற்றும் கீர்த்தி ஆகியோர் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.



▶ மாயமான மாணவனை கண்டுபிடித்த சப்-இன்ஸ்பெக்டர் ராதாகிருஷ்ணன், காவலர் வைத்தியநாதனை இன்ஸ்பெக்டர்கள் தியாகராஜன் கீர்த்தி ஆகியோர் பாராட்டினார்.

கஞ்சனூர் துப்பாக்கி சுடும் தளத்தில்

புதுவை போலீசாருக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி

செப்.4ம் தேதி வரை நடக்கிறது

புதுச்சேரி, ஆக. 20: கஞ்சனூர் துப்பாக்கி சுடும் தளத்தில் புதுச்சேரி போலீசார் துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் புதுவை காவல் துறையினருக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி நடத்தப்படுவது வழக்கம். புதுவையில் துப்பாக்கி சுடும் தளம் இல்லாததால் விழுப்புரம் மாவட்டம் கஞ்சனூர் பகுதியில் உள்ள சுப்பாக்கி சுடும் தளத்துக்கு சென்று பயிற்சியில் ஈடுபடுவது வழக்கம். இதன் மூலம் நிறமையான போலீசார் ஊக்குவிக்கப்படுவார்கள்.

இந்நிலையில் புதுவை காவல்துறையினருக்கு இந்தாண்டுக்கான துப்பாக்கி சுடும் பயிற்சி நேற்று முன்தினம் தொடங்கியது. முதற்கட்டமாக ஒரு நாளைக்கு 250 பேர் வீதம் இரண்டு நாட்களில் 500 காவலர்கள் துப்பாக்கி சுடும் பயிற்சிக்கு சென்று வந்துள்ளனர். இந்த பயிற்சி முகாம் ஆக.18ம் தேதி முதல் செப்.4ம் தேதி வரை நடக்கிறது.

அதன்படி ஆக.18ம் தேதி முதல் ஆக.23ம் தேதி வரை அனைத்து ஆண், பெண் காவலர்கள், தலைமை காவலர்களுக்கும், ஆக.25, 26 ஆகியதேதிகளில் அனைத்து எஸ்பிக்கள், இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் குறிப்பிட்ட உதவி சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், ஆக.28, 30 மற்றும் 31ம் தேதிகளில் அனைத்து ஆண், பெண் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், சீனியர் கிரேடு சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், செப்.4ம் தேதி சீனியர் எஸ்பி உள்ளிட்ட அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் துப்பாக்கி சுடும் பயிற்சி நடைபெறவுள்ளது.



▶ கஞ்சனூர் துப்பாக்கி சுடும் தளத்தில் புதுவை போலீசாருக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கப்பட்டது.

ில்லியனூர் கொலை வழக்கில் 6 பேர் சிறையில் அடைப்பு



துவையாறு பேட் சவுந்தர் கொலை வழக்கில் 6 பேரை போலீசார் கைது செய்தனர்.

ில்லியனூர், செப். 20– பில்லியனூர் அருகே ந்த வாலிபர் கொலை க்கில் தலைமறை ன 6 பேரை போலீசார் து செய்து, சிறையில் டத்தனர்.

புதுச்சேரி, உறுவையாறு ட்டை சேர்ந்தவர் அங் ன் மகன் சவுந்தர்,31; யார் நிறுவன டிரை ான இவர், கடந்த 17 தேதி மாலை வி.தட் ஞ்சாவடி சாலையில் க்கில் சென்றபோது, ம கும்பல் சமமாரியாக ட்டி கொலை செய்து ட்டு தப்பிச் சென்றது. இதுகுறித்து வில்லிய ர் இன்ஸ்பெக்டர் கலை ன் வழக்கு பதிந்து ாரித்தார். அதில், டைத்த தகவலின் பேரில் ாலை வழக்கில் சம்மந் பட்ட உறுவையாறு பேட் கோவிந்தராஜ் மகன் விக்னேஷ்,22; ராமச்சந்திரன் மகன் மணிபாரதி,22; வெக்குமார் மகன் வித்யசேகர்,25; புதுச்சேரி நிப்புராயன்பேட்டை ஞார்துசாமி மகன் இனேஷ்,31; உருளையன்பேட்டை, தென்னஞ்சாலை குமார் மகன் மணியழகன்,23; லாஸ் பேட்டை வாசன் நகர் ஆறுமுகம் மகன் யோகேஷ்வரன்,25; ஆகிய 6 பேரை கைது செய்தனர்.

விசாரணையில், கடந்த 2024ம் ஆண்டு ஜன.,13ம் தேதி இரவு உறுவையாறுபேட் கோவிந்தராஜ் மகன் தனபாலை, சவுந்தரின் தம்பி ரவுடி ஜீவா, ஞானபிரகாசம், சந்துரு உள்ளிட்ட 4 பேர் கொலை செய்தனர். இதனால், இரு தரப்பிற்கும் முன்விரோதம் இருந்துவந்தது. சில மாதங்களுக்கு முன் கிராமத்தில் நடந்த அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் சவுந்தர் மற்றும் விக்னேஷ் தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் பழிவாங்க திட்டமிட்டனர். அதில், விக்னேஷ் தரப்பினர் முந்திக் கொண்டு, சவுந்தரை, கொலை செய்து தொடர்ந்து வந்தது.

கைது செய்யப்பட்ட 6 பேரையும் நேற்று புதுச்சேரி கோர்ட்டில் ஆஜர் படுத்தி, காலாப்பட்டு சிறையில் அடைத்தனர். வழக்கில் விரைந்து குற்றவாளிகளை கைது செய்த இன்ஸ்பெக்டர் கலையரசன் மற்றும் போலீசார ை எஸ்.பி., சுப்ரமணி பாராட்டினார்.

'சமூக வலைதளத்தில் வெளியிடுவேன்' என

பெண்கள் புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்து மிரட்டிய யூடியூபர் கைது

புதுச்சேரி, ஜூலை.29- பெண்களின் புகைப்படங்களை ஆபாசமாக சித்தரித்து சமூக வலைதளத்தில் வெளியிடுவேன் என மிரட்டிய பிரபல யூடியூபரை புதுவை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

யூடியூபர்

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் தாலுகா படந்தாள் கிராமத்தை சேர்ந்தவர் பி.கே.விஜய் என்கிற துர்க்கை ராஜ் (வயது 42). பட்டாக ஆலையில் வேலை செய்து வரும் இவருக்கு திருமணமாகவில்லை. இவர் 'நெக்ஸ்ட் என்ன பண்ணலாம்' என்ற பெயரில் யூ-டியூப் சேனல் நடத்தி வருகிறார்.

சமூக வலைதளத்தில் பிரபலமாக உள்ள புதுச்சேரியை சேர்ந்த இளம்பெண்களை பின் தொடர்ந்து நட்பாக பழகி வந்தார். அவர்களின் புகைப்படங்களை பெற்று, அதனை ஆபாசமாக சித்தரித்து அவதூறான தகவல்களை பரப்பினார். மேலும் அரசியல் தலைவர்கள் குறித்தும் அவதூறு கருத்துகளை வலைதளங்களில் பிரபலமாக இருக்கும் பெண்களை, இனிமேல் சமூகவலைதளத்தில் வீடியோ பதிவிட்டால், தங்களின் புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்து பதிவிடுவதாக மிரட்டியுள்ளார்.

இதுதொடர்பாக புதுவை பெண்கள் அளித்த புகாரின் பேரில் புதுச்சேரி சைபர் கிரைம் போலீஸ் இன்ஸ்பெக் நித்யா ராதாகிருஷ்ணன் கூறுகையில், 'சமூக வலைதளங்களில் பெண்களின் புகைப்படங்களை ஆபாசமாக சித்தரித்து பதிவிடுவது, அவதூறு கருத்துகளை தெரிவிப்பது குற்றமாகும். அவ்வாறு செய்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.



புதுச்சேரி சைபர் கிரைம் போலீசாரால் கைது செய்யப்பட்ட துர்க்கைராஜை (கைக்கட்டி நிற்பவர்) படத்தில் காணலாம்.

போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த ஆலோசனை கூட்டம்

புதுச்சேரி, ஆக. 19: புதுச்சேரி நகரப்பகுதியில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவது குறித்த ஆலோசனை கூட்டம் கிழக்கு போக்குவரத்து காவல் நிலையத்தில் நேற்று நடந்தது. போக்குவரத்து சீனியர் எஸ்பி நித்யா ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். டிஐஜி சத்தியசுந்தரம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். போக்குவரத்து எஸ்பிக்கள்



புதுச்சேரி நகரப்பகுதியில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவது குறித்த ஆலோசனை கூட்டம்

எஸ்.பி., அலுவலகத்தில் கண் சிகிச்சை முகாம்

அரியாங்குப்பம், செப். 21– வல்லபாய் பட்டேல் பிறந்த நாளையொட்டி, அரியாங்குப்பம் எஸ்.பி., அலுவலகத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது.

அரியாங்குப்பம் போலீ



வல்லபாய் பட்டேல் பிறந்த நாளையொட்டி, அரியாங்குப்பம் எஸ்.பி., அலுவலகத்தில், இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது.

தானியங்கி கண்காணிப்பு கேமராவுடன்

புதுவை போக்குவரத்து போலீசுக்கு அதிநவீன ரோந்து வாகனங்கள்

புதுச்சேரி, செப்.24- தானியங்கி கண்காணிப்பு கேமராவுடன் புதுச்சேரிபோக்குவரத்து போலீசுக்கு அதிநவீன ரோந்து வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

அதிநவீன வாகனங்கள்

புதுவை மாநிலத்தில் காவல் துறை நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு சைரன் விளக்குகளுடன் கூடிய ரோந்து மோட்டார் சைக்கிள்கள் வாங்கப்பட்டன. இந்த நிலையில் தற்போது 2 அதிநவீன வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. அதில் ஒரு வாகனம் தற்கு பகுதி போலீஸ் நிலையத்திற்கும், ஒரு வாகனம் டக்கு பகுதி போக்குவரத்து போலீஸ் நிலையத்திற்கும் முங்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களில் நவீன ரானியங்கி கேமரா, ஸ்பீடு ன், வாகன ஓட்டிகள் குடித்து ட்டு வாகனம் ஓட்டுகின்ற ரார்? என்பதை கண்காணிக்கும் கருவி உள்ளது. இதன லம் வாகனத்தின் நம்பர்



புதுவை போக்குவரத்து போலீசாருக்கு வாங்கப்பட்டுள்ள அதிநவீன ரோந்து வாகனத்தை படத்தில் காணலாம்.

கட்டுப்பாட்டு அறையுடன் இந்த வாகனம் ஆன்லைன் மூலம் இணைக்கப்பட்டு இருக்கும்.

அபராதம்

ஹெல்மெட் அணியாமல்

செல்லுதல், செல்போன் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுவது ஆகியவற்றையும் கண்காணிக்கமுடியும். போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு உடனடியாக அபராதம் விதித்து இ-செல்லான்





புதுச்சேரி கடலோர காவல் நிலையத்திற்கு புதிதாக வாங்கப்பட்டுள்ள ரப்பர் படகுகளை சீனியர் போலீஸ் சூப்பிரண்டுகள் கலைவாணன், பிரவீன்குமார் திரிபாதி கடலில் இயக்கி சோதனை செய்ததையும் படத்தில் காணலாம்.

கடத்தல் சம்பவங்களை தடுக்க

கடலோர போலீசாருக்கு 3 நவீன ரோந்து படகுகள்

பேரிடர் காலங்களில் பயன்படுத்தவும் திட்டம்

புதுச்சேரி, ஆக.20- கடத்தல் சம்பவங்களை தடுக்க புதுச்சேரி கடலோர போலீசுக்கு 3 புதிய ரோந்து படகுகள் வாங்கப்பட்டுள்ளன.

கடலோர காவல் நிலையம்

புதுச்சேரி தேங்காய்த்திட்டு துறைமுகத்தில் கடலோர காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது. கடல் பகுதியில் போதைப்பொருள் கடத்தல் தடுப்பு, சந்தேகத்துக்கு இடமான கடலில் செல்லும் படகுகளை கடலோர ரோந்து போலீசார் படகு மூலம் கண்காணித்து ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த ரோந்து படகு பழுதால் 2 ஆண்டுகளாகியும் சரி செய்யப்படவில்லை. இதனால் போலீசார் கடலுக்கு ஏற்பட்டது. மேலும் ரோந்து பணிக்காக மீனவர்களின் படகுகளை இரவலாக வாங்கி செல்லும் அவல நிலை இருந்து வந்தது. இதனால் கடலோர காவல்நிலையத்திற்கு புதிய படகுகள் வாங்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

3 புதிய படகுகள்

இதனை தொடர்ந்து தற்போது அரசுக்கோணம் தேசிய பேரிடர் மீட்பு பிரிவில் இருந்து ரூ.1 லட்சம் மதிப்பில் 3 ரப்பர் படகுகள் வாங்கப்பட்டுள்ளன. இந்த படகுகள் தேங்காய்த்திட்டு துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு கடலோர போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டன. அந்த படகுகளை சீனியர் போலீஸ்

வாணன், பிரவீன்குமார் நிபாதி பார்வையிட்டனர். இதுகுறித்து கலைவாணன் திருப்பாகளிடம் கலந்தாலோசித்து 'இந்த படகு கடலோர காவல் படை ரோந்துக்கும், பேரிடர் காலங்களில் நகர், ஊரமைப்புகளில் பாதிப்பு ஏற்பட்டால் மக்களை மீட்கவும் பயன்படுத்தப்படும். இந்த ரப்பர் படகை இயக்க போதிய பயிற்சி தேவை என்பதால் கடலோர காவல்படையில் இருந்து போலீசார் தேர்வு செய்யப்பட்டு அரக்கோணத்தில் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்படுவார்கள். இவ்வாறு கடலோர காவல்படை போலீசார் இளமும் இவ்வாறு ரோந்து பணி மேற்கொள்வார்கள் படகுக்காக காத்திருக்க தேவையில்லை' என்றார்.

முன்னதாக புதிய ரப்பர் படகுகளும் கடலில் இயக்கி சோதனை ஓட்டம் நடத்தப்

சைக்கிள் பயன்பாடு விழிப்புணர்வு பேரணி



கலிதீர்த்தாள்குப்பம் காமராஜர் கல்லூரியில் சைக்கிள் பயன்பாடு குறித்து மாணவர்கள் விழிப்புணர்வு பேரணி சென்றனர்.

திருபுவனை, ஆக. 18: உலக மிதிவண்டி தினத்தையொட்டி புதுச்சேரி மதகடிப்பட்டு அடுத்த கலிதீர்த்தாள்குப்பம் பகுதியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அரசு கலைக் கல்லூரி தேசிய மாணவர் படை கமாண்டோ ஏ.ஆர். மொகந்தி உத்தரவின்பேரில் மிதிவண்டி பேரணி நடந்தது. இந்நிகழ்ச்சியில் தேசிய மாணவர் படை பிரிவு லெப்டினன்ட் முனைவர் கதிர்வேல் வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் முதல்வர் கனகவேல் தலைமை உரையாற்றினார். திருபுவனை சப்-இன்ஸ்பெக்டர் கதிரேசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சைக்கிள் பேரணியை தொடங்கி வைத்தார்.

பேரணி பல்வேறு கிராம பகுதிகளுக்கு சென்று மிதி வண்டியின் பயன்பாடு, மிதிவண்டியின் அவசியம், மிதிவண்டி பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து மாணவர்கள் விளக்கினார்கள். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தேசிய தரைப்படை மாணவர்கள் செய்திருந்தனர்.

மகளிர் தவறவிட்ட 30 போன்கள் ஒப்படைப்பு



புதுச்சேரி சைபர் போலீஸ் நிலையத்தில் நடந்த மக்கள் மன்றம் நிகழ்ச்சி, சீனியர் எஸ்.பி., நித்யா ராதாகிருஷ்ணன் தலைமையில் நடந்தது.

புதுச்சேரி, ஆக. 17–

புதுச்சேரி சைபர் போலீஸ் நிலையத்தில் மக்கள் மன்றம் நிகழ்ச்சி, சீனியர் எஸ்.பி., நித்யா ராதாகிருஷ்ணன் தலைமையில் நேற்று நடந்தது.

நிகழ்ச்சியில் எஸ்.பி., பாஸ்கரன், இன்ஸ்பெக்டர்கள் தியாகராஜன், கீர்த்தி மற்றும் போலீசார் கலந்து கொண்டனர்.

இதில், 30க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்று, சைபர் மோசடி தொடர்பாக புகார்கள் மற்றும் குறைகளை தெரிவித்தனர். அதில், மக்கள் அளித்த புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க இன்ஸ்பெக்டர்களுக்கு சீனியர் எஸ்.பி., உத்தரவிட்டார்.

மேலும், பொது மக்கள் தவறவிட்ட ரூ. 7 லட்சம் மதிப்பிலான 30 மொபைல் போன்கள் கண்டுபிடிக்கப்பட்டு, உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

போலீசுக்கு அதிநவீன வசதியுடன் 'போல் நெட் 2.0.,' அமைப்பு

புதுச்சேரி அரசு மற்றும் போலீஸ் துறையின் முதுகெலும்பாக போலீஸ் கட்டுப்பாட்டு அறை, அவசர காலத்தில் உதவக்கூடிய 'எமர்ஜன்சி ரெஸ்பான்ஸ் சப்போர்ட்' பிரிவு இயங்கி வருகிறது. மத்திய அரசு மற்றும் பல்வேறு மாநில அதிகாரிகளுடன் அரசு முறையாக தொடர்பு கொள்ளவும், தகவல்களை பரிமாற கட்டுப்பாட்டு அறைக்கு, கடந்த 7 ஆண்டிற்கு முன்பு 'போலீஸ் நெட்' என்கிற 'போல் நெட்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இதன் மூலம் நாடு முழுவதில் இருந்தும் தகவல்கள் புதுச்சேரி கட்டுப்பாட்டு அறைக்கு பரிமாறப்பட்டு வந்தது. இவை எழுத்து வடிவில் மட்டுமே கிடைத்து வந்தது.

தற்போது அதனை புதுப்பித்து அதிநவீன வசதியுடன் கூடிய 'போலீஸ் நெட் 2.0'., அமைக்கப்பட்டுள்ளது. இது வி.சாட் செயற்கைகோளுடன் நேரடியாக இணைப்பு பெற்றதுடன், அதிக ஸ்பெக்ட்ரம் செயல்திறன், சிறந்த நெட்வொர்க் பாதுகாப்பு, சமீபத்திய இணையதள மேலாண்மை அமைப்பு தொழில்நுட்பத்தை கொண்டது.

பெயர் பலகை இல்லையே

கோரிமேடு ஒருங்கிணைந்த போலீஸ் வளாகத்தில் இயங்கும் மற்ற பிரிவு அலுவலகங்களுக்கு பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. ஆனால் போலீஸ் கட்டுப்பாட்டு அறை, எமர்ஜன்சி ரெஸ்பான்ஸ் சப்போர்ட் பிரிவுக்கு பெயர் பலகை இதுவரை அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் வானிலை தொடர்பு வலையமைப்பாகவும், தொலைதூரம், அணுக முடியாத மற்றும் எல்லை பகுதியில் உள்ள மாநிலம், யூனியன் பிரதேச போலீஸ் நிலையங்கள், தொழில்பாதுகாப்பு படை மற்றும் சி.பி.எப்., அலுவலகங்களை அணுக முடியும்.

இந்த அதிநவீன வசதி மூலம் மத்திய உள்துறை அமைச்சகம் வீடியோ கான்பிரன்ஸ் மூலம் எந்த நேரத்திலும் அனைத்து மாநில, யூனியன் பிரதேசங்களை தொடர்பு கொள்ள முடியும்.

ஆவணங்கள் மற்றும் மல்டிமீடியா கோப்புகளை விரைவாக அனுப்பும் வசதி உள்ளது. இந்த நவீன வசதியை பேக்கிங் செய்து கொண்டு செல்லும் வசதி இருப்பதால், எங்கிருந்து வேண்டுமானாலும் மாநில அரசுகளை தொடர்பு கொள்ள முடியும். பேரிடர் காலத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த அதிநவீன வசதி புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள போலீஸ் கட்டுப்பாட்டு அறையில் புதிதாக பொருத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, காரைக்கால், மாகி, ஏனாமில் பொருத்தும் பணி துவங்கி உள்ளது.

PUDUCHERRY POLICE



QUARTERLY NEWSLETTER
JULY- SEPTEMBER, 2025

police.py.gov.in

@ Puducherry Police

@ PondyTraffic

@ Puducherry Police @ PondyTraffic